**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ப. முரளி அர்த்தனாரி Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 06.07.2021

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக**
**முதுகலை கல்லூரிகள் மீண்டும் திறப்பு**

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகமானது கொராணா தொற்று காலத்தில் ஏப்ரல் 2020 முதல் மாணவர்களுக்கு தடையற்ற கல்வியை இணைய வழி மூலம் கற்பித்தலும், பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி துறையில் சிறந்த கல்வியை மாணவர் சமுதாயத்திற்கு நல்குவதிலும் சிறந்து விளங்குகிறது. 35 முதுநிலை மேற்படிப்பு மற்றும் 29 ஆராய்ச்சி படிப்புகளின் தேர்வுகளை இணையவழி மூலமாக வெற்றிகரமாக நடத்தி சாதனை படைத்துள்ளது. பல்கலைக்கழக ஆசிரியர்கள் கொரோனா பெருந்தொற்று காலத்திலும் பாடநெறிப்பணிகளையும், மாணவர்களின் ஆராய்ச்சிகளையும் தொடர்ந்து நடத்தி வந்தனர். இந்நிலையில் நமது தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலின்படி வருகின்ற 12.07.2021-ல் இருந்து ஆராய்ச்சி கூடங்களை திறந்து முதுகலை மற்றும் முனைவர் பட்டபடிப்பு மாணவர்கள் ஆராய்ச்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு சிறந்த வேலைவாய்ப்பினை பெறுவதற்கு ஏதுவாக முதுகலை கல்லூரிகள் திறக்கப்பட உள்ளன. அனைத்து வேளாண்மை உறுப்பு கல்லூரிகளும் மாணவர்களை பாதுகாப்பான விதிமுறைகளை அதாவது சமுக இடைவெளியை கடைப்பிடித்தல், முகக்கவசம் அணிதல், மற்றும் கைகளை சோப்பு போட்டுக் கழுவுதல் போன்றவற்றை பின்பற்றி செயல்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**